DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR),
TIRUCHIRAPPALLI.
**Spl.S.C.No. 40/2025**
**P.W. 1**

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி. அலமேலு |
| Husband's Name | : | திரு. வெங்கடேசன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 50 |

(Accused is present)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 4th day of June 2026.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருச்சி வடக்கு தாராநல்லூர், காமராஜ் நகரில் வசித்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக உள்ளேன். எனக்கு 3 குழந்தைகள் இருக்கிறார்கள். எனது கணவர் பெயர் வெங்கடேசன் ஆகும். அவர் இறந்து 10 வருடங்கள் ஆகிறது. எனது மூத்த மகன் மலையன் 9 வருடங்களுக்கு முன்பு விபத்தில் இறந்துவிட்டார். சூர்யமூர்த்தி எனது 2வது மகன் ஆவார். நாங்கள் இந்து, பறையர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் ஆவோம். இந்த வழக்கின் எதிரியை தெரியும். எதிரி இந்து, மறவர் வகுப்பைச் சேர்ந்தவர் ஆவார். என் மகன் சூர்யமூர்த்தி ITI முடித்துவிட்டு காந்தி மார்க்கெட்டில் லோடுமேன் வேலை பார்த்து வருகிறான். காளியா என்ற பையனும், ஆஜர் எதிரியும் காந்தி மார்க்கெட்டில் ஒரு பெண்ணுடன் தவறாக இருந்ததை என் மகன் பார்த்து கண்டித்துள்ளார். அதனால் எதிரிக்கு என் மகன் மீது விரோதம் இருந்து வந்துள்ளது. 02.10.2025 ம் தேதி இரவு சுமார் 01.00 மணியளவில் எனது மகன் சாப்பிடுவதற்காக தேவர் பூங்கா அருகில் உள்ள இருளப்பன் ஹோட்டலுக்கு சென்றான். அப்போது அங்கு வந்த எதிரி சூர்யா என் மகன் சூர்யமூர்த்தியை பார்த்து பறத் தேவிடியா மகனே என்று திட்டி, நீ எங்க ஏரியாவிற்கு வருவியா என்று சொல்லி காளியாவும், சூர்யாவும் கத்தியால் என் மகன் தலை, இடது கை,

கழுத்து ஆகிய இடங்களில் கத்தியால் மாறி மாறி குத்தியதாகவும், பிறகு என் மகனை எனது கணவரின் நண்பர் ரமேஷ் என்பவர் திருச்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு கொண்டு சேர்த்ததாகவும், என் மகனை மருத்துவமனையில் ரமேஷ் என் கணவர் வெங்கடேஷ் பெயரில் சேர்த்ததாகவும், சம்பவம் கேள்விபட்டு மருத்துவமனைக்கு சென்று என் மகனைப் பார்த்த போது என் மகன் என்னிடம் கூறினான். நான் காந்தி மார்க்கெட் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அந்த புகார் மனு அ.சா.ஆ. 1 ஆகும். என்னை உதவி ஆய்வாளர் விசாரித்த போது என் மகனை எதிரிகள் சாதி குறித்து திட்டி மிரட்டியதாகவும் கூறினேன். என்னை உதவி ஆணையர் விசாரித்த போதும் நடந்த விபரங்களை சொன்னேன்.

**குறுக்கு விசாரணை**

எனக்கு சம்பவம் நேரடியாக தெரியாது. ரமேஷ் என்பவர் சொல்லிதான் எனக்கு சம்பவம் தெரிய வந்தது. இரவு சுமார் 1:30 மணி முதல் 2.30 மணிக்குள்ளாக என் மகனை மருத்துவமனையில் சென்று பார்த்தேன். நான் சம்பவம் கேள்விப்பட்டு காந்தி மார்க்கெட் காவல் நிலையம் வழியாகத்தான் அரசு மருத்துவமனைக்கு செல்ல வேண்டும் என்றால் சரிதான். என் வீட்டின் அருகில் புறக்காவல் நிலையம் உள்ளது. அன்றைய தினம் ஆயுத பூஜை நடைபெற்றதால் அந்த இடத்தில் காவலர்கள் யாரும் இல்லை. நான் அரசு மருத்துவமனைக்கு சென்று எனது மகனை முதலில் பார்த்துவிட்டு அதன் பிறகு தான் புகார் கொடுக்க வந்தேன். என் மகன் சொன்ன விபரத்தை கேட்டு தான் நான் புகார் கொடுத்தேன். எதிரியை பற்றி எனது மகன் சொல்லி தான் எனக்கு தெரியும். நாங்கள் இருக்கக்கூடிய பகுதியும், எதிரி இருக்கக் கூடிய பகுதியும் வெவ்வேறு பகுதிகள் என்றால் சரிதான். புகார் மனுவை எனது அக்கா மகன் சுரேஷ் என்பவரை வைத்து எழுதினேன். நான் புகார் கொடுக்கும் போது இரவு 3 மணி இருக்கும். எனது மகனை மருத்துவமனையில் சேர்த்த ரமேஷ் என்ற நபர் எனது கணவரின் நண்பர் ஆவார். எனது மகனை வெங்கடேஷ் என்ற நபர் மருத்துவமனையில் சேர்த்திருக்கிறார் என்றால் எனது கணவர் பெயர் வெங்கடேஷ் ஆகும் ரமேஷ் தான் தவறுதலாக வெங்கடேஷ் என்று என் கணவர் பெயரை சொல்லி இருக்கிறார். எனது மகன் காந்தி மார்க்கெட்டில் சுமை தூக்கும் பணியாளராக வேலை பார்த்து வருகிறான். என் மகன் வேலை பார்க்கும் கடை பெயர் எனக்கு சரியாக தெரியாது. ஆனால் அது காய்கறி கமிஷன் கடை ஆகும். பொதுவாக ஆயுத பூஜை தினத்தன்று இரவு 10.00 மணிக்கு ஆயுத பூஜை நடத்திவிட்டு கடையை பூட்டி விடுவார்கள் என்றால் சரிதான். அன்றைய தினம் எனது மகன் வீட்டிற்கு வரவில்லை. எனது மகன்

மீது குற்ற வழக்குகள் எதுவும் இல்லை. காந்தி மார்க்கெட் பகுதியில் சுமை தூக்கும் பணியாளர்கள் சங்கங்களுக்கு இடையில் பிரச்சனை உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது மகனுக்கும், வேறு சங்கத்தைச் சார்ந்த சுமை தூக்கும் பணியாளர்களுக்கும் இடையில் தான் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. காந்தி மார்க்கெட் பகுதி இரவு நேரத்திலும் செயல்படும் என்றால் சரிதான். அங்கு இரவு நேரத்திலும் வியாபாரிகளும், சுமை தூக்கும் பணியாளர்களும், கூலி வேலை செய்பவர்களும் நிறைந்து இருப்பார்கள் என்றால் சரிதான். என் மகனை தாக்கிய நபர்கள் யார் என்று தெரியாது என்றால் சரியல்ல. என் மகனை தாக்கிய நபர்கள் யார் என்று தெரியாத காரணத்தினால் போலீசார் கூறியவாறு பொய் புகார் கொடுத்து அதன் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட பொய் வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் மகனுக்கு ஏற்பட்ட காயத்திற்கும் எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXXX,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

Advocate

DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR),
TIRUCHIRAPPALLI.
Spl.S.C.No. 40/2025
P.W.2

| | | |
|---|---|---|
| Name | : | திரு. சூர்யமூர்த்தி |
| Father's Name | : | திரு.வெங்கடேசன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 27 |

(Accused is present)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 4th day of June 2026.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருச்சி வடக்கு தாராநல்லூர், காமராஜ் நகரில் வசித்து வருகிறேன். எனது அப்பா பெயர் வெங்கடேசன் ஆகும். அவர் இறந்து 10 வருடங்கள் ஆகிறது. அ.சா.1 அலமேலு எனது அம்மா ஆவார். எனது அண்ணன் மலையன் 9 வருடங்களுக்கு முன்பு விபத்தில் இறந்துவிட்டார். நாங்கள் இந்து, பறையர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் ஆவோம். இந்த வழக்கின் ஆஜர் எதிரியை தெரியும். எதிரி இந்து, மறவர் வகுப்பைச் சேர்ந்தவர் ஆவார். நான் ITI முடித்துவிட்டு காந்தி மார்க்கெட்டில் லோடுமேன் வேலை பார்த்து வருகிறேன். 13வயது சிறுமியிடம் காளியா மற்றும் ஆஜர் எதிரி மற்றும் இரண்டு நபர்கள் தகாத முறையில் நடந்துக் கொண்டதை நான் பார்த்து அவர்களை கண்டித்தேன். அதனால் அவர்கள் என் மீது விரோதம் கொண்டிருந்தார்கள். கடந்த 02.10.2025 ம் தேதி நள்ளிரவு 01.00 மணியளவில் தேவர் பூங்கா அருகில் உள்ள இருளப்பன் ஹோட்டலுக்கு சாப்பிட சென்றேன். அப்போது காளியாவும், சூர்யாவும் இருவரும் சேர்ந்து என்னை தாக்கினார்கள். என்னை பார்த்து பறத் தேவிடியா மகனே, நீ எதுக்குடா எங்க ஏரியாவிற்கு வந்த என்று கெட்ட வார்த்தைகளால் திட்டி அதில் காளியா என்பவர் கத்தியால் எனது பின்னந்தலை, இடது கை, கழுத்து, இடது கால், இடுப்பு ஆகிய இடங்களில் குத்தி தாக்கினார். அதன் பிறகு எதிரி சூர்யா

அதே கத்தியை காளியாவிடம் இருந்து வாங்கி எனது இடுப்பு, தொடை, மார்பு பகுதி, வலது விலா பகுதி ஆகிய இடங்களில் குத்தினார். சாவுடா பறத் தேவிடியா மகனே என்று திட்டினார்கள். நான் கத்தியவுடன் ரமேஷ் என்பவர் உதவியுடன் திருச்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தேன். நான் மருத்துவமனையில் இருக்கும் போது எனது அம்மா வந்து பார்த்தார். பிறகு இது குறித்து என் அம்மாவிடம் நடந்த சம்பவத்தை கூறினேன். எனது அம்மா காந்திமார்க்கெட் காவல் நிலையத்தில் புகார் ஒன்று கொடுத்தார். வழக்கு சம்மந்தமாக உதவி ஆய்வாளரும், உதவி ஆணையரும் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய பகுதியில் இரு புறமும் வீடுகள் இருக்கிறது என்றால் சரிதான். அந்த ரோட்டில் வழக்கமாக ஆள் நடமாட்டம் இருக்கும் என்றால் சம்பவம் நடந்த அன்று ஆயுத பூஜை நடந்து முடிந்து இருந்த காரணத்தினால் ஆள் நடமாட்டம் இல்லை. அன்றைய தினம் கடைகள் எதுவும் இல்லை. நான் சி.ஐ.டி.யூ தொழிற்சங்கத்தில் இருக்கிறேன். காந்தி மார்க்கெட்டில் இருக்கக்கூடிய கடைகளில் ஒரு சங்கத்தை சேர்ந்த நபர்கள் மட்டும் தான் சரக்குகளை ஏற்றி இறக்க வேண்டும் என்றால் சரிதான். மற்ற சங்கத்து கூலி தொழிலாளர்களை சுமை தூக்கும் தொழிலாளர்களை அனுமதிக்க மாட்டோம் என்றால் சரிதான். கடை உரிமையாளர்கள் வேறு நபர்களை வைத்து சரக்குகளை இறக்க முற்பட்டால் நாங்கள் அவர்களை தடுத்து விடுவோம் என்றால் சரிதான். எதிரி குடியிருக்கக்கூடிய பகுதியும் நான் குடியிருக்கக்கூடிய பகுதியும் வெவ்வேறு என்றால் சரிதான். காந்தி மார்க்கெட் பகுதியில் இரவு நேரத்தில் ஆள் நடமாட்டம் அதிகம் இருக்கும் என்றால் அன்றைய தினம் ஆயுத பூஜை நடைபெற்றதால் சரக்கு எதுவும் வரவில்லை. ஆயுத பூஜை தவிர மற்ற நாட்களில் ஆள் நடமாட்டம் அதிகம் இருக்கும். சம்பவம் நடந்ததாக சொல்லும்போது வேறு யாரும் இல்லை என்றால் ஹோட்டல் கடையில் 5 நபர்களும், எதிரியும், நானும் இருந்தோம். பிரச்சனை நடந்த போது அங்கு இருந்த நபர்கள் யாரும் அதை தடுக்க முற்படவில்லை. பிரச்சனை முடிந்த பிறகு குடிபோதையில் ரமேஷ் வந்து என்னை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். அந்த ரமேஷ் என்பவர் என் அப்பாவுக்கு தெரிந்த நபர் ஆவார். அந்த ரமேஷ் தான் என்னை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார் என்பதை போலீசார் என்னை விசாரித்த போது சொன்னேன். எனது உடலில் எங்கெல்லாம் காயம் ஏற்பட்டது என்று முதல் விசாரணை சாட்சியத்தில் கூறியதை தான் என் அம்மாவிடமும் நான் சொன்னேன். அதேபோல் சம்பவத்தை யார் யாரெல்லாம்

பார்த்தார்கள் என்ற விவரத்தையும் நான் என் அம்மாவிடம் சொன்னேன். அதன் அடிப்படையில் அவர் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். பிரச்சனைக்கு முன்பு எனக்கு எதிரியை தெரியாது என்றால் சரியல்ல. எதிரியை நன்கு தெரியும். நான் நடந்ததாக சொல்லக் கூடிய சம்பவம் எவ்வளவு நேரம் நடைபெற்றது என்றால் சுமார் அரை மணி நேரம் நடந்தது. நான் அங்கிருந்து கொஞ்ச தூரம் ஓடினேன். நான் சுமார் 10 அடி தூரம் ஓடி சென்று கீழே விழுந்து விட்டேன். போலீசார் என்னை விசாரித்த போது நான் எங்கு சென்று விழுந்தேன் என்பதை கேட்டு குறித்து கொண்டார்கள். என்னை பரிசோதித்த மருத்துவரிடம் என்னை தாக்கிய நபர் தெரிந்த ஒரு நபர் என்று சொன்னேனா என்றால் நான் அப்போது மயக்கத்தில் இருந்தேன். நான் டாக்டரிடம் தெரிந்த இரண்டு நபர்கள் வெட்டி விட்டார்கள் என்று சொன்னேன். நான் மறுநாள் காலை 07.00 மணி அளவில் டாக்டரிடம் சொன்னேன். எனக்கு மயக்கம் தெளிந்த பிறகு தான் நான் டாக்டரிடம் தெரிவித்தேன். இருளப்பன் ஹோட்டலில் அன்றைய தினம் 2 லோடுமேன், கடை உரிமையாளர் மற்றும் இரண்டு நபர்கள் இருந்தார்கள். போலீசார் என்னை விசாரித்த போது நான் இந்த விபரத்தை தெரிவித்தேன். சம்பவ இடத்திற்கு சற்று தள்ளி ரத்தம் கிடந்தது. அன்றைய தினம் நான் காந்தி மார்க்கெட்டில் இருந்து சாப்பிடுவதற்காக இருளப்பன் ஹோட்டலுக்கு வந்தேன் என்று தான் போலீசார் என்னை விசாரித்த போது கூறினேன். அன்றைய தினம் நான் வீட்டிற்கு செல்லவில்லை. நான் சொன்ன நாளில் சொன்ன விதத்தில் ஒரு சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கும், எதிரிக்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. காந்தி மார்க்கெட் பகுதியில் என்னை இடம் தெரியாத நபர்கள் தாக்கி விட்டார்கள் என்றும், அவ்வாறு தாக்கிய நபர்கள் பெயர்கள் தெரியாத காரணத்தினால் எதிரிகள் மீது பொய்யாக ஒரு புகார் என் அம்மாவை வைத்து கொடுக்க வைத்து அந்த வழக்கில் நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> **– இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXXX,

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

Adobe